பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 11 | வியாழக்கிழமை | 28.09.2023 | அதிர்வு 58

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்த்திருவிழா

**- வடமராட்சி நிருபர் -**

யாழ். வடமராட்சி, துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று இடம்பெறும்.

கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகோற் 03▶

# இரண்டாம் தவணைக் கடன் நாணய நிதியம் கைவிரிப்பு

## கால தாமதமாகலாம் என்கிறார் பீற்றர்




**“இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் எப்போது வழங்கப்படும் என உறுதியாகத் தெரிவிக்க முடியாது. ஏனெனில் இலங்கை விதிக்கப்பட்ட இலக்குகளின் நோக்கங்களை நிறைவேற்றத் தவறியுள்ளது. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் கால தாமதமாகலாம்.”**

**- இவ்வாறு சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.** 02▶

# தடை உத்தரவை மீறி விகாரை கட்டும் பணி

## இலுப்பைக்குளம் பிரதேச மக்கள் விசனம்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை,இலுப்பைக் குளத்தில் விகாரைக் கட்டுமானப் பணிகளுக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள சர்ச்சைக் குரிய பகுதியில் இரகசியமான முறையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப் 03▶

# முள்ளிவாய்க்காலில் புலிகளின் தங்கம் தேடும் வேட்டை நேற்றுடன் நிறைவுக்கு



– முல்லைத்தீவு நிருபர் –

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் தங்கம், ஆயுதங்களைத் தேடி கடந்த மூன்று நாட்களாக முன்னெடுக்கபட்ட அகழ்வுப் பணிகள் நேற்று மாலையுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பால் தங்கம் மற்றும் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என்று புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் 03▶

# கிளிநொச்சியில் வீடு புகுந்து கண்மூடித்தனமான தாக்குதல்

## ஐவர் காயங்களுடன் வைத்தியசாலையில்

**- கிளிநொச்சி நிருபர் -**

கிளிநொச்சி, திருவையாறு பகுதியில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த குழுவொன்று சரமாரித் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

20 இற்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட குழுவினர் வீட்டுக்குள் நுழைந்து சரமாரியாகத் தாக்குதல் மேற்கொண்டதுடன், அங்கிருந்தவர்களைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் காயப்படுத்தியும் 02▶



நேற்று மட்டும் இலங்கையின் நீதிமன்றங்களினால் 13 பேருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களின் அனேகர் முஸ்லிம்கள்.

களுத்துறையில் 20 வருடங்களுக்கு முன்னர் இளைஞர் ஒருவரைக் குத்திக் கொலை செய்த வழக்கில் எட்டுப் பேருக்கு களுத்துறை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கி 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யிருக்கிறது.

இதேவேளை, 152 கிலோ ஹெரோயினை மீன்பிடிப் படகில் கடத்திய ஐவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கி இருக்கிறது.

கொலை, பாலியல் வல்லுறவு, போதை வஸ்துக் கடத்தல் விவகாரங்களில் சம்பந்தப்பட்டோருக்கு இலங்கைச் சட்டங்களின்படி மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும், 1976க்குப் பின்னர் சட்ட ரீதியாக மரண தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை. மரண தண்டனைக் கைதிகள் ஆயுள் கைதிகளாக சிறை இருப்பதுதான் வழமையாக உள்ளது.

எனினும் போதை வஸ்து விவகாரங்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டோருக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றும் முயற்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டாராயினும், அவரது பதவிக் காலத்தில் அவர் அதனைச் செய்ய முடியாதவாறு சட்ட நகவுகளை நீதிமன்றங்களில் மேற்கொண்டு, அம்முயற்சிகளை முறியடித்தன மனித உரிமை ஆர்வலர் தரப்புகள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மரண தண்டனை இல்லை. ஆகக்கூடியது நீண்ட கால மற்றும் ஆயுள் சிறைதான். ஒரு கைதி வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தையே அவருக்கு எதிரான சான்றாதாரமாகப் பயன்படுத்தி, அதனடிப்படையில் அவரைக் குற்றவாளியாகக் கண்டு, அவருக்குத் தண்டனை விதிக்கும் முறைமை பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ளமையால், அதன் கீழ் மரண தண்டனை விதிக்க சட்டத்தில் இடமில்லை.

ஆயினும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இருவருக்கு மரண தண்டனை கிட்டியிருக்கிறது.

ஒருவர் – செல்வராசா யோகச்சந்திரன் எனப்படும் குட்டிமணி. மற்றவர் சிவநாதன் ஜெகநாதன் எனப்படும் ஜெகன். ரெலோவின் பிதாமகர்களுள் இவர்கள் இருவரும் அடங்குவர்.

கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கிலேயே இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கான்ஸ்டபிள் சிவநேசன் கொல்லப்பட்ட சமயம் நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கவில்லை. 1978 இல்தான் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கழித்து குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்ட சமயம் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது.

கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு எதிராக, கறுப்பன் என்ற மூன்றாவது எதிரியுடன் சேர்ந்து, சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டது. அதாவது குற்றப் பத்திரம் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆயினும், அந்த வழக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டது . அதன் கீழ், எதிரிகள் தடுப்புக் காவலில் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அவர்களுக்கு எதிரான சாட்சியமாக ஏற்று அவர்கள் இருவரையும் குற்றவாளியாகக் கண்டது கொழும்பு மேல் நீதிமன்றம். கறுப்பன் விடுதலையானார்.

விசாரணையும், குற்றவாளியாகக் கண்டதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ். ஆனால் தண்டனையோ குற்றப் பத்திரம் தாக்கலான தண்டனைச் சட்ட கோவையின் கீழ்.

தண்டனைச் சட்ட கோவையின் கீழ் கொலைக் குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்கலாம். அது இருவருக்கும் விதிக்கப்பட்டது. இப்படித்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்ட ஒரு வழக்கில் மரணதண்டனை விதிக்கும் 'சட்டத் தவறு' அரங்கேறியது.

1976 க்குப் பின் இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஆயினும், இந்த இருவருக்கும் மட்டும் – குட்டிமணிக்கும் ஜெகனுக்கு மட்டும் – 1982இல் விதிக்கப்பட்ட மரண தண்டனை சிறைக்குள் அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

என்ன, சட்டப்படி நிறைவேற்றப்படவில்லை. மாறாக, 1983 ஜூலைக் கலவர சமயம் சக சிங்கள கைதிகள் குட்டிமணி, ஜெகன், தங்கதுரை போன்றோரின் கண்களைப் பிடுங்கி அவர்களைச் சிறைக்குள் கொடூரமாக – குரூரமாக – கொன்றொழித்தனர். 54 தமிழ் அரசியல் கைதிகள் இப்படி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர் – தர்மிஷ்டர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தார்மீக ஆட்சியில்.

கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட போது, தாங்கள் அவ்வாறு மரண தண்டனைக்கு உட்படுத்தப்படும்போது தங்கள் கண்களை தானம் செய்கின்றார்கள் என அறிவித்த அவர்கள் இருவரும், தானம் செய்த தங்களின் கண்களின் ஊடாக வருங்காலத்தில் தமிழீழம் மலர்வதை காண்போம் என்று நீதிமன்றக் கூண்டிலேயே நின்று கொண்டு பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தினர். கூண்டுக்குப் பக்கத்தில் பத்திரிகையாளர் மேசையில் அமர்ந்திருந்து என் குறிப்பு புத்தகத்தில் அவற்றைப் பதிந்த நான், அடுத்த நாள் பத்திரிகையில் அதனைச் செய்தியாக்கியிருந்தேன். அந்த செய்தி அடுத்தநாள் நான் பணியாற்றிய கொழும்பு நாளிதழில் எனது பெயருடன் முதலாம் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது. 42 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த அதன் பிரதியை இன்னும் நான் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

அப்படி கூண்டிலிருந்து பகிரங்கமாகக் கூறியமைக்காகத்தான் வெலிக்கடை சிறையில் கண்கள் பிடுங்கி எறியப்பட்டு, அவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள்.

பௌத்த – சிங்கள பேரினவாதத்தின் பௌத்த சீல ஆட்சியின் சிறப்புக்களில் இதுவும் ஒன்று.

பல்லாயிரம் மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட சமாதிகளை, புல்டோசர் கொண்டு அடி மண்ணோடு அகழ்ந்து சிதைத்தழித்தமை பௌத்த சீல நாட்டின் அடுத்த பெருஞ்சிறப்பு...!

## கிளிநொச்சியில் வீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் குழுவினர் சிசிரிவி கமராக்கள், மின்விளக்குகள், பிரதான வாயில் என்பவற்றைத் தாக்கி அழித்ததுடன், மோட்டார் சைக்கிளையும் சேதமாக்கிய பின் அதனை எடுத்துச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது பெற்றோல் குண்டும் வீசப்பட்டுள்ளது.

சம்பவத்தில் வெட்டுக் காயங்களுக்குள்ளான நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன் தாக்குதல் நடத்திய குழுவைச் சேர்ந்த ஒருவரும் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் விடுமுறையைக் கழிப்பதற்காக தனது வீட்டுக்கு வந்துள்ளார். அவரின் வீட்டிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவரது மனைவியின் தாய், தந்தை, சகோதரன் மற்றும் அவரது நண்பர் ஆகியோரே சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். வெளிநாட்டுப் பிரஜைக்கும், அவரது மனைவிக்கும் தாக்குதலில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் சந்தேகநபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும், அடையாளம் காணப்பட்டுள்ள ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களில் பலர் கடந்த காலங்களில் வெவ்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் கீழ் இடம்பெற்ற சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கத் தாக்குதலுக்குள்ளான குடும்பத்தினர் பல முயற்சிகளை எடுத்திருந்தனர்.

தாக்குதல் மேற்கொண்ட குறித்த குழுவில் மணல் மாபியாக்களே அதிகம் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது குறித்த மணல் அகழ்வு முற்றாகத் தடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் பழிவாங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

## இரண்டாம் தவணைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் புருவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இரண்டாவது தவணைக் கடன் எப்போதும் வழங்கப்படும் என்பது குறித்து நிலையான கால அட்டவணை எதனையும் தெரிவிக்க முடியாது.

இலங்கை இரண்டு முக்கிய நோக்கங்களை நிறைவேற்றத் தவறிவிட்டது.

நாங்கள் திருப்தியடைவதற்கு இரண்டு விடயங்கள் அவசியம். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், கொள்கைள், சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் நாங்கள் இணக்கப்பாட்டை எட்டவேண்டும் அதுவே நாங்கள் முன்னேறிச் செல்ல உதவும். அதன் மூலமே நாங்கள் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியும்.

ஆகவே, ஒரு விடயத்தில் ஒரு வருடத்தில் குறைபாடுகள் உள்ளதை நாங்கள் காணமுடிகின்றது. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முயல்கின்றோம்." – என்றார்.

# இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது பருத்தித்துறை பிரதேச செயலக அணி!



யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக உதைப்பந்தாட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

யாழ். மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான இந்தப் போட்டித் தொடர் கடந்த இரு நாட்களாக வேலணை துறையூர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அணிகள் என மொத்தம் 15 அணிகள் பங்குபற்றியிருந்தன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை 3:0 என்ற அடிப்படையிலும், மாவட்ட செயலக அணியை 1:0 என்ற அடிப்படையிலும் வெற்றி பெற்று அரையிறுதி போட்டிக்குப் பருத்தித்துறை பிரதேச செயலக அணி முன்னேறியிருந்தது.

நேற்று அரையிறுதிப் போட்டியில் காரைநகர் பிரதேச செயலக அணியை 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக அணி முன்னேறியுள்ளது. இந்த அணி இறுதிப் போட்டியில் வேலணை பிரதேச செயலக அணியுடன் மோதவுள்ளது.

# நிர்வாண வீடியோவை இணையத்தில் விற்பனை செய்த பெண்ணுக்கு மறியல்

பணத்துக்காக நிர்வாண வீடியோவை இணையத்தில் பகிர்ந்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண் ஒரு பிள்ளையின் தாய் என்பதுடன், குறித்த வீடியோவைப் பகிர்வதற்கு அவரது கணவரும் உடந்தையாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் பிரிவின் அதிகாரிகளால் அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டு, கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



நிமிடத்திற்கு 1000 ரூபா என்ற கணக்கில் அந்தப் பெண் தனது வங்கிக்கணக்கில் பணத்தை வைப்பிலிட்ட நபர்களுடன் தனது நிர்வாண வீடியோக்களைப் பகிர்ந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வல்லிபுர ஆழ்வாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சவத்தில் இன்று அதிகாலை வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று வல்லிபுரப் பெருமான் காலை 8 .45 மணியளவில் தேரில் ஆரோகணித்து வலம் வருவார்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சமுத்திரத் தீர்த்தமும், மறுநாள் சனிக்கிழமைகேணித்தீர்த்தம்இடம்பெறும். ஆலயத்துக்கான போக்குவரத்து ஒழுங்குகள் வழமைபோல் இடம்பெறும் எனவும், அடியார்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும் ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

## தடை உத்தரவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுகின்றன என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலுப்பைக்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர்ப்பலகை நடப்பட்டுள்ள பகுதியில் இரகசியமான முறையில் இரவு வேளைகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.

கடந்த 25ஆம் திகதி இரவு சில கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப்பகுதியில்விகாரையின்கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் தடை விதித்து தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் இரகசியமான முறையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மக்கள் அதிருப்தி வெளியிடுகின்றனர்.

அந்தப் பகுதியில் விகாரையின் கட்டுமானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இம்மாதம் 3ஆம் திகதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்பின்னர் 9 ஆம் திகதி காலை மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அந்தப் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகை நடப்பட்டிருந்தது.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் குறித்த விகாரை அமைக்கப் படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், இந்தச் செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் அகழ்வுப் பணிகள் கடந்த 25 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், மூன்றாவது நாளாக நேற்றும் கனரக இயந்திரத்தின் மூலம் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

தொல்பொருள் திணைக்களத்தினர், பிரதேச செயலகத்தினர், கிராம சேவையாளர், தடயவியல் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மூன்று நாள் அகழ்வுப் பணிகளின் போது அடையாளம் காணப்பட்ட குறித்த பகுதி 13 அடி ஆளமும் 17 மீற்றர் நீளமும் தோண்டி அகழப்பட்டதுடன் அந்தப் பகுதியில் நின்ற மரங்கள், 15 இற்கும் மேற்பட்ட பனைகள், வடலிகள் முற்றாக அகற்றப்பட்டன.

நேற்று மாலை 5.45 மணி வரை அகழ்வுப் பணிகள் நீடித்த நிலையில் எவ்வித ஆயுதங்களோ, தங்கங்களோ மீட்கப்படவில்லை. இதையடுத்து அந்தப் பகுதியை மூடுமாறு நீதிவான் பணித்தார். இதனைத் தொடர்ந்து குறித்த பகுதி மூடப்பட்டது.




# 'சனல் 4' தொலைக்காட்சி நிறுவனத்திடம் ராஜபக்ஷக்கள் நட்டஈடு கோர வேண்டும்!

## மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன கூறுகிறார்





"சனல் 4" வெளியிட்ட ஆவணப்படத்தால் ராஜபக்ஷக்களின் கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்திடம் ராஜபக்ஷக்கள் நட்டஈடு கோர வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளோம்.

மக்களைக் கொன்று ஆட்சிக்கு வர வேண்டிய தேவை ராஜபக்ஷக்களுக்கு இல்லை என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமை (இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி சேவை வெளியிட்ட ஆவணப்படத்துக்கு எதிர்க்கட்சியினர் அதிக முக்கியத்துவம் வழங்கினார்கள். குண்டுத்தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்கள் உள்ளார்கள், பொதுஜன பெரமுனவின் தேர்தல் வெற்றிக்காக குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்தார்கள்.

அரச பாதுகாப்பு பிரதானி சுரேஷ் சலேவுக்கும் பயங்கரவாதி சஹ்ரானுக்கும் இடையில் எவ்வித சந்திப்பும் இடம்பெறவில்லை என்று சனல் 4 தொலைக்காட்சி சேவையின் முக்கிய தரப்பினர் தற்போது குறிப்பிட்டுள்ளார்கள்.

இதுவே உண்மை.ராஜபக்ஷக்களினால்தான் நாட்டு மக்கள் இன்று சுதந்திரமாக வாழ்கிறார்கள். மக்களை கொன்று ஆட்சிக்கு வரும் கொள்கை ராஜபக்ஷக்களுக்கு இல்லை என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சனல் 4 தொலைக்காட்சி சேவை வெளிப்படுத்திய ஆவணப்படுத்தால் ராஜபக்ஷகளின் கௌரவத்துக்கு பாரிய பாதிப்புஏற்பட்டுள்ளது.ஆகவேஇதற்காக ராஜபக்ஷக்கள் சனல் 4 விடம் நட்டஈடு கோர வேண்டும் என்பதை கட்சி என்ற அடிப்படையில் வலியுறுத்துவோம்.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் கடனா உட்பட நாடுகள் தலையிடுவது ஒன்றும் புதிய விடயமல்ல. வழமையானதே. எந்த நாட்டையும் பகைத்துக் கொள்ள வேண்டிய நோக்கம் இலங்கைக்கு இல்லை. நாட்டின் இறையாண்மையை பாதுகாத்துக் கொண்டு சகல நாடுகளுடன் இணக்கமாக செயற்படுவது அத்தியாயசியமானது. - என்றார்.

# + பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் + இணையப் பாதுகாப்புச் சட்டமூலம்

# இரண்டு சட்ட வரைவுகளுக்கும் பலத்த எதிர்ப்பு கிளம்புகின்றது

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் ஆகியவற்றின் சட்ட வரைவுகள் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு தமது வலுவான கவலையை வெளிப்படுத்த மேற்குலக நாடுகள் தயாராகி வருகின்றன என அறிய முடிகிறது.

இரண்டு சட்டமூலங்கள் தொடர்பிலும் மேற்குலக நாடுகள் தீவிரப் பகுப்பாய்வுகளை நடத்தி வருகின்றமையுடன் தங்கள் சட்ட வல்லுநர்களுடன் இந்தச் சட்டமூலங்களை ஆராய்ந்து அவதானித்த பின்னரே தமது கவலையை வெளிப்படுத்த இந்த நாடுகள் முடிவுசெய்துள்ளன.

இந்த நாடுகளின் பிரதிநிதிகள் சட்ட வல்லுநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். சர்வதேச தரநிலைகள் மற்றும் விதிமுறைகளைப் புறக்கணித்து இந்தச் சட்டமூலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்பது மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் முன்மொழியப்பட்ட விடயமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிராந்தியத்தில் சந்தைகளை அணுகுவதற்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தக வசதியைத் தொடர்ந்து இலங்கை பெறுவாதற்கு சர்வதேச தரநிலைகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கும் வகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

அரசாங்கம் முதலில் சமர்ப்பித்த புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் வரைவை மேற்கத்திய நாடுகள் கடுமையாக விமர்சித்தமையைத் தொடர்ந்து அந்தச் சட்ட வரைவைத் திருத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கப்பட்டன.

எதிர்க்கட்சிகள், சிவில் சமூக அமைப்புகளும் புதிய சட்டத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

அதன் பின்னர் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய வரைவும் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்றது.

முன்னதாக, அமெரிக்க வெளிவிவகார துணைச் செயலர் விக்டோரியா நுலாண்ட், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தபோது, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் புதிய வரைவின் உள்ளடக்கம் குறித்தும் கேட்டறிந்தார். முந்தைய வரைவில் இருந்து இது முன்னேற்றகரமாக இருந்தபோதிலும், அமெரிக்காவும் இந்தச் சட்ட வர்ச்வையிம் கவலையுடன் பார்ப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

# களுத்துறை மேல் நீதிமன்றத்தில் நேற்று எண்மருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு!

களுத்துறை மேல் நீதிமன்றம் நேற்று எட்டு பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி ஒருவரை கூரிய ஆயுதத்தினால் வெட்டிக்கொலை செய்த சம்பவத்துடன் தொடர்பில் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டிருந்த 8 பேரும் குற்றவாளிகள் எனக்கூறி நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன இந்தத் தண்டனையை அறிவித்துள்ளார்.

களுத்துறை தெற்கு கலீல் பிளேஸ் பகுதியை சேர்ந்த ஒருவரே 2003 ஆம் ஆண்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

கொலை சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபர் 8 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

கொலை சம்பவம் தொடர்பான நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் நேற்றுத் தீர்ப்பை அறிவித்துள்ள நீதிபதி குற்றச்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபிக்கப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிப்பதாக கூறியுள்ளார்.

மஹா ஹீனடியங்கல பிரதேசத்தை சேர்ந்த 46 வயதான மொஹமட் செய்ன் மொஹமட் ஹம்சா, 49 வயதான அப்துல் கரீம் மொஹமட் ரவிஸ்தீன், 59 வயதான மொஹமட் மவீரஸ் மொஹமட், 45 வயதான மொஹமட் ரியாஸ்தீன் மொஹமட், 47 வயதான மொஹமட் ஜிப்ரி மொஹமட் ஜின்னா, 43 வயதான மொஹமட் ஜிப்ரி மொஹமட் பிரிதவிஸ், 44 வயதான மொஹமட் சாஹீர் மொஹட் சியாம், 45 வயதான மொஹமட் நிலாப்தீன் மொஹமட் அஜீல் ஆகியே குற்றவாளிகளுக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியசாலை கட்டடத்திலிருந்து விழுந்து 17 வயது சிறுவன் மரணம்

மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவர் வைத்தியசாலை கட்டடத்திலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

தெல்தெனிய வைத்தியசாலையில் மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பன்வில – கந்தேகும்புர பகுதியைச் சேர்ந்த ஹர்ஷன லக்ஷான் தில்ருக்ஷ என்ற17 வயதுடைய சிறுவன் வைத்தியசாலையின் ஐந்தாவது மாடியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் என்று தெல்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் 6வது மாடியில் உள்ள அறையொன்றில் சிகிச்சை பெற்று வந்த அந்தச் சிறுவன், மாடியில் இருந்து தவறி விழுந்து பலத்த காயமடைந்தார். இதையடுத்து தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.



சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் திட்டங்கள் நடுவீதிக்கு!

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு, கடனிறுக்க வழியின்றி, தடுமாறி நின்ற இலங்கைக்கு அந்தச் சிக்கலில் இருந்து மீளுவதற்கு, ஆபத்பாந்தனாக முதுகு கொடுத்து உதவ முன்வந்தது சர்வதேச நாணய நிதியம்.

அதன்படி 2.9 பில்லியன் டொலர் கடனை பல்வேறு கட்டங்களில் வழங்கி, இலங்கையைப் பொருளாதார சரிவிலிருந்து மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாரானது.

அதன் முதலாவது கட்டக் கடன் ஏற்கனவே இலங்கைக்கு வழங்கப்பட்டு விட்டது. அதனால் கழுத்தை இறுக்கிய நெருக்கடியில் இருந்து இலங்கை ஓரளவு மீண்டு, ஆசுவாசமாக மூச்சு விடும் நிலைமைக்கு வந்தது.

ஆனால், அடுத்து வரவேண்டிய இரண்டாவது தவணைக் கடன் எப்போது வழங்கப்படும் என்பதை இப்போது உறுதியாகத் தெரிவிக்க முடியாது என சர்வதேச நாணய நிதியம் நேற்று கைவிரித்து விட்டது.

இலங்கைக்கான இரண்டாவது தவணைக்கடன் எப்போதும் வழங்கப்படும என்பது குறித்து நிலையான காலஅட்டவணை எதனையும் உறுதியாகத் தெரிவிக்க முடியாது என சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் சிரேஷ்ட தலைவர் பீற்றர் புருவர் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவது மற்றும் நெருக்கடியில் இருந்து இலங்கையை நாணய நிதியம் மீட்டெடுப்பது ஆகியவை தொடர்பான திட்டத்தில், இந்த ஏற்பாட்டின் ஆரம்பத்திலேயே சில விடயங்களை நாணய நிதியம் உறுதியாகத் தெரிவித்து வந்தது.

நாணய நிதிய உதவிகளையும் கடனையும் இலங்கை பெறுவதாயின் பொருளாதார சீர்திருத்தம் தொடர்பாக நாணய நிதியம் முன் வைக்கும் வழிகாட்டல்களை அதற்குரிய காலத்தில் இலங்கை நிறைவு செய்ய வேண்டும் என்பதே அந்த முன் நிபந்தனை ஆகும்.

ஆனால், தான் விதித்த நிபந்தனைப்படி சில, பல முக்கிய விடயங்களை இலங்கை உரிய காலத்தில் நிறைவேற்றத் தவறியுள்ளமையால், இலங்கைக்கு அடுத்த கட்ட கடனுதவியை உடனடியாக வழங்க முடியாதிருப்பதாகக் கூறி கையை விரித்திருக்கின்றது நாணய நிதியம்.

நாணய நிதியம் திருப்தி அடைவதற்கு அவசியமென நிர்ணயிக்கப்பட்ட இரண்டு இலக்குகளை உரிய காலத்தில் எட்டுவதற்கு கொழும்பு தவறி உள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

பொருளாதார மீட்சிக்கான வாய்ப்புகள் இன்னும் முழு அளவில் உறுதிப்படுத்தப்படவில்லை. வரி அறவீடு, அது தொடர்பான நிர்வாகம், வரி விலக்கு ஒழுங்குகள், வரி செலுத்தாமல் ஏய்க்கும் போக்கைத் தடுத்தல் போன்ற விடயங்கள் இன்னும் சரியாக நேர்சீர் செய்யப்படாமல் இருப்பதாக நாணய நிதியம் வெளிப்படையாக - அப்பட்டமாக - தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கட்ட - இரண்டாவது கட்ட - கடன் உதவியை நம்பித்தான், அதன் அடிப்படையில்தான், அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்க ரணிலின் அரசு முன்வந்தது.

வரவு - செலவுத் திட்ட ஒழுங்குகள் உட்பட ரணில் அரசின் எல்லா அரசியல் நகர்வுகளும் நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடனுதவித் திட்ட கைவிரிப்பால் நடுவீதிக்கு வந்துவிட்டது என்பதுதான் இப்போதைய நிலைமை.

## 4 வயதில் பாலர் கல்வி கட்டாயமாக்கப்படுமாம்!

இலவசக் கல்வியைக் கொண்ட உலகின் ஒரு சில நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறி, முதலாம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம் வரை இலவச கல்வி வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்தும் அதே வேளையில், நான்கு வயதை எட்டும் அனைத்து குழந்தைகளுக்கும் சிறுவயது கல்வி கட்டாயமாக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கட்டணம் செலுத்த முடியாத குழந்தைகளின் சார்பில் அரசு தலையிட்டு, தேவையின் அடிப்படையில், இடவசதி உள்ள ஆரம்ப பாடசாலைகளில் குழந்தை பருவ வளர்ச்சி மையங்களை நடத்தலாம்.

மூடப்படும் சவாலை எதிர்கொள்ளும் பாடசாலைகளுக்கு இது ஒரு தீர்வாக இருக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் குழந்தைகளின் முறையான ஆரம்ப குழந்தை பருவ வளர்ச்சியே கல்வி மாற்ற சீர்திருத்தங்களில் வெற்றி பெறுவதற்கான மிக அடிப்படையான படியாகும்.

பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு மாதத்தை முன்னிட்டு பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## நாட்டிலுள்ள மூன்று ஆறுகள் பெருக்கெடுக்கும் பேரபாயம்

பலத்த மழை காரணமாக மூன்று ஆறுகள் பெருக்கெடுக்கும் மட்டத்தை அடைந்துள்ளன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நில்வலா கங்கை, குடா ஓயா கங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவை அவதான மட்டத்தை அடைந்துள்ளன என திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றர் வரையிலான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில் கைது செய்யப்பட்ட 17 தமிழக மீனவர்கள் விடுதலை

யாழ். நெடுந்தீவில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 17 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் மற்றும் ஜெகதாபட்டிணத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் கடந்த 13 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, அவர்களின் மூன்று விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையில், இது தொடர்பான வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மீனவர்கள் 17 பேரையும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனை என்ற அடிப்படையில் நிபந்தனையுடன் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், உரிமை கோரிக்கை வழக்கின் பின்னர் கைப்பற்றப்பட்ட விசைப்படகுகளை விடுவிக்க நேற்று நீதிமன்றில் தீர்மானிக்கப்பட்டது என நீரியல் வள திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

# குரங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு அம்பகமுவ மக்கள் திண்டாட்டத்தில்!

அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பல கிராமங்களில் குரங்குகளின் எண்ணிக்கை திடீரென் அதிகரித்திருக்கின்றமையால் அப் பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

கிரிவநெலிய, லக்ஷபான, ஹக்ர பிட்டிய, களுகல, பொல்பிட்டிய, நல்ல தன்னிய ஆகிய கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இந்த குரங்குகளால் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர்.

மேலும், இக்குரங்குகள் பயிர்களுக்கு சேதம் விளைவிப்பதால் தாங்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதிகளில் வீட்டுத் தோட்டங்களுக்குள் கூட்டம் கூட்டமாக படையெடுத்து வரும் எருமைகளாலும் பெரும் தொல்லை ஏற்படுவதாகவும் பாதிக்கப்படும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



பயிர்களை நாசம் செய்வது மட்டுமின்றி, வீடுகள், கடைகளுக்குள் புகுந்து உணவுடன் ஏனைய பொருட்களையும் அவை நாசம் செய்கின்றன எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

இது தொடர்பில் வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, மஸ்கெலியா பகுதியில் உள்ள களஞ்சிய சாலைகளில் குரங்குகள் உணவுப் பொருள்களை நாசம்பண்ணுவதாக விற்பனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாளுக்கு நாள் குரங்குகளின் சேட்டை அதிகரித்துள்ளது. பருப்பு மூடைகளைக் கடித்துக் குதறி அதில் உள்ள பருப்பை குரங்குகள் நாசம் பண்ணுவதாக பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் முகாமையாளர் தெரிவித்தார்.

அது மட்டும் அல்லாமல் அந்த வீதியில் உள்ள பழக்கடைகளில் உள்ள வாழைப்பழம் மற்றும் ஏனைய பிஸ்கட் பக்கட்டுகளை கூட்டம் கூட்டமாக வந்து அவை சூறையாடிச் செல்வதாக அந்தப் பகுதி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி இந்தக் குரங்குகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஜேர்மன் பயணமானார் ஜனாதிபதி; ஐந்து பதில் அமைச்சர்கள் நியமனம்

ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெறவுள்ள பேர்லின் உலகளாவிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச்சென்றார்.

இந்த மாநாடு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி ஜேர்மனிக்கு சென்றுள்ளார். பேர்லின் உலகளாவிய மாநாட்டில் உலக நாடுகளின் தலைவர்களுடன் ஒன்றிணைந்து வர்த்தகம் மற்றும் பிரத்தியேகத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

ஜேர்மன் ஜனாதிபதியின் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜேர்மன் ஜனாதிபதிக்கு இடையிலான சந்திப்பொன்றும் இதன்போது நடைபெறவுள்ளது.

இதனிடையே, ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுகளின் பணிகளை கண்காணிப்பதற்காக 5 பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பதில் நிதியமைச்சராக ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஜேர்மனுக்கான உத்தியோகபூர்வ விஜயம் நிறைவுபெறும் வரை நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசியக் கொள்கை அமைச்சின் கடமைகளை ஆற்றுவதற்காக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தொழில்நுட்ப பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல், பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளாளர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஹெரோயின் கடத்திய ஐவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு நேற்று

மீன்பிடிக் கப்பலொன்றில் ஹெரோயின் போதைப்பொருளை கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 5 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

நீண்ட விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே இந்தத் தீர்ப்பை அறிவித்தார்.

2019ஆம் ஆண்டு, இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக் கப்பலில் 152 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் கடத்தியமைக்காக இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மீன்பிடி கப்பலில் உள்ள மீன் மற்றும் ஐஸ் சேமிப்பு பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டு தலா 25 கிலோ எடையுள்ள 08 பைகளில் போதைப்பொருள் தொகையை கடத்தினர் என இவர்கள் மீது குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

இரத்மலானை பகுதிக்கு அண்மித்த கடலில் கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, இந்த சந்தேக நபர்களின் மீன்பிடி படகு கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தார்.

விசாரணைகளின் பின்னர் தீர்ப்பை அறிவித்த நீதிபதி நாமல் பண்டார பலாலே, பிரதிவாதிகளுக்கு எதிராக அரசுத் தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

அனைத்து விடயங்களையும் பரிசீலித்த மேல்நீதிமன்ற நீதிபதி குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை அறிவித்தார்.

# போராட்டத்துக்குத் தயாராகின்றது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு பின்னர் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

முறையற்ற வரிக்கொள்கை, மருந்து தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்க்க சுகாதார அமைச்சருக்கு எதிர்வரும் 11ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு நேற்று கூடியபோது, இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

# வடக்கிலுள்ள தொல்பொருள் இடங்களை வர்த்தமானியில் அறிவிக்குமாறு வலியுறுத்தல்

வட மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள தொல்பொருள் இடங்களை முறையாக வர்த்தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இரண்டு துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் வலியுறுத்தியுள்ளன.

மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு, ஊடகங்கள், இளைஞர்கள், பாரம்பரியம் மற்றும் பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு என்பன அண்மையில் கூடியபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு – குருந்தூர்மலையை அண்மித்த பகுதியில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக புத்த சாசனம், மத விவகாரம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் இந்த கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தன.

இந்த காணியில் தொல்பொருள் திணைக்களத்திற்கு உட்படாத 3 ஏக்கர் காணியில் பௌத்த விகாரை மற்றும் இந்து ஆலயத்தை அமைப்பதற்கும், பொது வசதிகளுக்காக அதனை ஒதுக்குவதற்கும் புத்த சாசனம், சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் யோசனை முன்வைத்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், குருந்தூர் ரஜமஹா விகாரையை சுற்றியுள்ள 229 ஏக்கர் காணி தொல்பொருள் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குருந்தூர் ரஜமஹா விகாரையை சுற்றியுள்ள தொல்பொருள் பாதுகாப்புப் பகுதியை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் நிபுணர்கள் குழுவொன்று ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளோம் என தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

6 மாதங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தொல்லியல் இடங்களை அடையாளம் கண்டு, அந்த பகுதிகளை தொல்பொருள் பிரதேசமாக பெயரிடவும், ஏனைய பகுதிகளுக்கு விலக்களிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது என தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குருந்தூர் ரஜமஹா விகாரையை சுற்றியுள்ள தொல்பொருள் பிரதேசத்தில் விவசாயம் செய்துவரும் மக்களுக்கு, வேறு பிரதேசத்தில் காணிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இம் மாதமும் பணவீக்கம் வீழ்ந்தது!

கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம், கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஒகஸ்ட் மாதம் 4 சதவீதமாக இருந்த முதன்மைப் பணவீக்கம், இந்த மாதம் 1.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம் ஒகஸ்ட் மாதம் மறை – 4.8 சதவீமாக இருந்த உணவு பணவீக்கம் இந்த மாதம் மறை – 5.2 சதவீமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், உணவல்லாப் பணவீக்கம், கடந்த ஒகஸ்ட் மாதம் 8.7 சதவீதமாக இருந்த நிலையில், அது இந்த மாதத்தில் 4.7 சதவீதமாக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரையோர மார்க்கத்தில் ரயில் சேவைகள் தாமதம்



கரையோர மார்க்கத்தில் ரயில் சேவைகள் தொடர்ந்தும் தாமதமடையும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவயில் இருந்து மொரட்டுவை நோக்கி பயணித்த அலுவலக ரயிலொன்று கொள்ளுப்பிட்டியில் தடம்புரண்டுள்ளது.

இதனால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ரயில் அந்த பகுதியில் இருந்து அகற்றப்பட்டுள்ளது என ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் என்.ஜே. இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

எனினும், சேதமடைந்துள்ள தண்டவாளத்தை புனரமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

# மணிப்பூர் மாநிலம் முழுவதும் கலவரப் பகுதியாக அறிவிப்பு!



மணிப்பூரில் நிலவும் சட்டம் – ஒழுங்கு பிரச்சினையை கருத்தில் கொண்டு, ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதையும் 'கலவரப் பகுதி' ஆக அம்மாநில அரசு அறிவித்தது.

தலைநகர் இம்பால் உள்ளிட்ட 19 பொலிஸ் நிலையங்கள் உள்ள பகுதிகளைத் தவிர மாநிலம் முழுவதும் இந்த நிலை 6 மாதங்களுக்கு அமலில் இருக்கும்.

இது குறித்து மணிப்பூர் மாநில அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'பல்வேறு தீவிரவாத, கிளர்ச்சி குழுக்களின் வன்முறை நடவடிக்கைகள் மணிப்பூர் முழுவதும் சிவில் நடவடிக்கைகளைத் தொடருவதற்கு ஆயுதப் படைகளின் உதவியை நாடிடும் உத்தரவாதத்தை அளிக்கின்றது.

தற்போது மாநிலத்தில் நிலவும் சட்டம் – ஒழுங்கு பிரச்சினை மற்றும் அரசு இயந்திரத்தின் திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பதற்றமாக உள்ள இடங்களின் நிலையை இன்னும் ஆறு மாத காலத்துக்கு பதற்றமான இடங்களாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது. தலைநகர் இம்பால் உள்ளிட்ட காவல் நிலையங்கள் உள்ள 19 இடங்களுக்கு இந்த நிலை பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மணிப்பூரில் இணைய சேவை முடக்கம் ரத்து செய்யப்பட்ட உடனேயே வெளியான இரண்டு மாணவர்களின் சடலங்களைக் கொண்ட புகைப்படம் விரைந்து சமூக வலைதளங்களில் வைரலானது, இதனையடுத்து செவ்வாய் கிழமை இரவு தலைநகர் இம்பாலில் போராட்டம் வெடித்தது. இதனைத் தடுக்க பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் போராட்டக்காரர்கள் 45 பேர் காயமடைந்தனர்.

இதில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் ஆவர். அதிரடிப்படையினர் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியும், ரப்பர் தோட்டாக்களைப் பயன்படுத்தியும், தடியடி நடத்தியும் போராட்டத்தைக் கட்டுப்படுத்தினர்.

இந்த நிலையில், அங்கு மீண்டும் இணைய சேவை முடக்கப்பட்டது. மேலும், வன்முறைகள் வெடிக்கலாம் என்ற அச்சத்தால் பல பகுதிகளில் மீண்டும் ஊரடங்கு அமலபட்டிருக்கிறது. இருப்பினும், காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை உணவு, மருந்து உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் கொள்ளும் வகையில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. தளர்வு இருந்தாலும் கூட அநாவசியமான கூடுகைகள், பேரணிகள், பொதுக் கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலம் முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், நேற்று முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மாநிலம் முழுவதும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கொலை குறித்து மாநில முதல்வர் பிரேன் சிங் கூறுகையில், குற்றவாளிகளை கைது செய்ய மாநில அரசும், மத்திய அரசும் தீவிரமாக இணைந்து செயல்படுகிறது என மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மணிப்பூர் குறித்து பிரதமர் மோடிக்கு மீண்டும் நினைவுறுத்தியுள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது சமூக வலைத்தள பக்கத்தில், 147 நாட்களாக மணிப்பூர் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், பிரதமர் மோடிக்கு இன்னும் அங்கு செல்ல நேரம் கிடைக்கவில்லை. இந்த வன்முறையில் மாணவர்கள் குறிவைக்கப்பட்டு இருக்கும் கொடூரமான படங்கள் வெளியாகி ஒட்டுமொத்த தேசத்தையும் மீண்டும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. இந்தச் சண்டையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக வன்முறை ஆயுதம் ஏந்தப்பட்டிருப்பது வெளிப்படையாக தெரிகிறது என்று தெரிவித்துள்ளார்.

# கனடா -இந்தியா இடையிலான மோதல் இராணுவ உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது!

கனடா இந்தியா இடையேயான தூதரக மோதலானது இரு நாட்டு இராணுவ உறவிலும் பாதிப்பை ஏற்படுத்தாது என கனடாவின் இராணுவ துணைத் தளபதி மேஜர் ஜெனரல் பீட்டர் ஸ்காட் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்தோ – பசிபிக் ராணுவத் தலைவர்களின் 3 நாள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து கனடாவின் இராணுவ துணைத் தளபதி மேலும் தெரிவிக்கையில், ஜஸ்டின் ட்ரூடோ என்ன கூறினார் என்பதை நான் நன்கு அறிவேன். நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்திய அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவர் கோரி இருக்கின்றார். ஆனால், இந்த விவகாரம் இந்தோ – பசிபிக் மாநாட்டில் எங்களுக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இராணுவ ரீதியிலான உறவுகளை மேம்படுத்தவே நாங்கள் இங்கு இருக்கிறோம். அந்தப் பிரச்சினையை அரசாங்கங்கள் அவர்களுக்குள்ளாகவே சமாளித்துக் கொள்வார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# எத்தியோப்பியாவில் பட்டினியால் 13 ஆயிரத்து 29 பேர் உயிரிழப்பு



கிழக்கு ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவில் இரண்டு வருடங்களாக நீடித்த உள்நாட்டுப் போர் முடிவிற்கு வந்ததன் பின்னர், அந்த நாட்டின் டிக்ரே பிராந்தியத்தில் 13 ஆயிரத்து 29 பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

உள்ளூர் சுகாதாரத்துறையும், மெக்கலே பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

உள்நாட்டுப் போரால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள எத்தியோப்பியாவின் வடக்கு மாகாணமான டிக்ரே யின் தலைநகர் மிகேலியில் அண்மைக் காலமாக ஏற்படும் உயிரிழப்புகளுக்கு உணவுப் பற்றாக்குறை முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

டிக்ரேயில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வசிக்கும் முகாம்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் போது, அங்கு 1,329 பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிக்ரேயில் 88 துணை மாவட்டங்களும் இடம்பெயர்ந்தோர் வசிக்கும் 643 முகாம்களும் உள்ளன.

அனைத்திலும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டால், பட்டினி மரணங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எத்தியோப்பியாவில் 2 ஆண்டுகளாக நடைபெற்ற மோதலில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என கூறப்படுகிறது.

டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பிரதமர் அபை அகமது தலைமையிலான அரசாங்கத்திற்கு இடையில் இடம்பெற்ற மோதல் சர்வதேச நாடுகளின் முயற்சியால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

# நெல்சன் மண்டேலாவின் பேத்தி ஜோலேகா மண்டேலா உயிரிழப்பு!



தென்னாப்பிரிக்காவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பேத்தி ஜோலேகா மண்டேலா தனது 43 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு 9 ஏப்ரல் ஆம் திகதி பிறந்த சோலேகா மண்டேலா எழுத்தாளராகவும், மனித உரிமை ஆர்வலராகவும் செயற்பட்டார்.

இந்த நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த ஜோலேகாவுக்கு பல்வேறு நாட்டு தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# அதிகாரி ஒருவரை 11 முறை கடித்த பைடனின் நாய்!



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் வளர்ப்பு நாய் இரகசிய உளவுத்துறை அதிகாரி ஒருவரை 11ஆவது முறையாக கடித்துள்ளது என செய்தி வெளியாகியுள்ளது.

வெள்ளை மாளிகையில் வசிப்பதால் ஏற்பட்ட மன அழுத்தமே விலங்குகளையும் பாதித்துள்ளது என்று வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். காயமடைந்த அதிகாரி தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் , வெள்ளை மாளிகை வளாகத்தில் திடீரென வளர்ப்பு நாயை கையாள்வதற்கு தனி பயிற்சியும், கழுத்துப்பட்டை அணிவது குறித்தும் ஆலோசித்து வருகிறோம் என பைடனின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# மல்லாவியில் மகிழ்வு இல்லம் திறந்து வைப்பு











முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி ஒளிரும் வாழ்வு சமூக சேவை நிலையத்தில் மகிழ்வு இல்லக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

மாற்று வலுவுள்ளோர்களின் துயர் துடைக்கும் சமூக சேவை மையமாக கடந்த தசாப்த காலமாக இயங்கி வரும் ஒளிரும்வாழ்வு சமூக சேவை அமையத்தின் ஓர் அங்கமாக நேற்றைய தினம் மகிழ்வு இல்லம் எனும் பெயரில் சமூக சேவை கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தை உளநல வைத்திய நிபுணரும் பேராசிரியருமான டாக்டர் சிவயோகன் திறந்து வைத்தார். நிகழ்வில் மாற்று வலுவுள்ள மழலைகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பிரமுகர்களுக்கான கௌரவிப்பு பரிசில்களும் மற்றும் கலை, நடனங்கள் வழங்கிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டிருந்தன. நிகழ்வில் மத குருமார்கள், ஆயுள்வேத வைத்தியர் சிவரஞ்சனி சுசீந்திரன், அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் துசாந்தினி, மல்லாவி வர்த்தகர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்
















# லொறி - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## திருக்கோவிலில் இருவர் படுகாயம்

**(கனகராசா சரவணன்)**

அக்கரைப்பற்று திருக்கோவில் பிரதான வீதி தம்பிலுவில் பிரதேசத்தில் நேற்று மாலை 5 மணியளவில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்தை அடுத்து லொறிச் சாரதியைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனத் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவிலில் இருந்து அக்கரைப்பற்றை நோக்கி பயணித்த லொறியும் திருக்கோவிலை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் தம்பிலுவில் பிரதான வீதி வீ.சி. வீதிக்கு அருகில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின். மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் படுகாயமடைந்த நிலையில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.





# மட்டக்களப்பு அரசாங்க அதிபர் நாளையுடன் ஓய்வுபெறுகின்றார்





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா சேவைகால நீடிப்பு விண்ணப்பம் மறுக்கப்பட்டு அது தொடர்பான கடிதம் பொது உள்நாட்டு அமைச்சிடம் இருந்து நேற்றுப் புதன்கிழமை கிடைத்தமையை அடுத்து அவர் நாளை 29 ஆம் திகதி தமது 60 வயதில் ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அரசாங்க அதிபர் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபராக கடமையை பெறுப்பேற்றிருந்தார்.

தனது ஓய்வூதிய காலத்தின் போதும் தொடர்ந்து அரச சேவையில் கடமை யாற்றுவதற்கு பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சிடம் அவர் சேவைக் கால நீடிப்பு கோரிய நிலையில் கால அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு கடிதம் நேற்றுக் கிடைத்துள்ளது.

நாளையுடன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அவருக்கு நேற்றுப் பிரியாவிடை மட்டக்களப்பு கச்சேரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# கொழும்பு துறைமுக கிழக்கு முனைய செயற்பாடுகள் 2024 ஜூனில் ஆரம்பம்

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின் முதற்கட்ட செயற்பாடுகள் அடுத்த வருடம் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, துறைசார் மேற்பார்வைக் குழுவில் தெரிவித்துள்ளது.

வலுசக்தி மற்றும் போக்குவரத்து தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய போதே அமைச்சின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

இலங்கை துறைமுக அதிகார சபை சட்டமூலம், 2022 ஆம் ஆண்டுக்கான விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் லிமிட்டட் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை என்பவற்றை ஆராய்வதற்காக துறைமுகங்கள் அமைச்சு, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் லிமிட்டட் நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில் இலங்கை துறைமுக அதிகார சபை சட்டமூலத்திற்கு குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், இலங்கையில் பொருள்களை விநியோகிக்கும் போது கடல் மார்க்கமாக பொருள்களை கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் அமைச்சின் அதிகாரிகளுக்கு குழு ஆலோசனை வழங்கியுள்ளது.



## உயர்தர பரீட்சை திகதி தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதி தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை திகதிகளில் மாற்றம் மேற்கொள்ள நேரிடும் என இதற்கு முன்னர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

நவம்பர் 27 முதல் டிசம்பர் 21 வரை உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியாக இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபர்களுக்கான வெற்றிடங்களை உடனே நிரப்ப நீதிமன்றம் உத்தரவு

இலங்கை அதிபர் சேவையின் தரம் ஐஐஐ-இற்கான 4,718 வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கல்வி அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆள்சேர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான இடைக்கால தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விடயத்துடன் தொடர்புடைய மேலும் சில மனுக்களை வாபஸ் பெறுவதற்கு மனுதாரர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் ஆள்சேர்ப்புத் தொடர்பான சுற்றுநிருபத்தை இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றத்தினால் இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவும் நேற்று நீக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



# விமானப்படையை வீழ்த்தி சம்பியானது புனித மைக்கேல்




(அ.அஸ்வர்)

இலங்கை விமானப்படை அணிக்கும் புனித மைக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் அணிக்குமிடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் புனித மைக்கேல் கல்லூரி வென்றது.

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புனித மைக்கேல் கல்லூரிபழையமாவர்சங்கத்தின்ஏற்பாட்டில் இப்போட்டி நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் இயேசு சபை துறவிகளின் மேலாளர் அருட்தந்தை சகாயநாதன் அடிகளாரின் தலைமையில் கல்லூரியின் ஹெபர்ட் கூடைப்பந்தாட்ட உள்ளக அரங்கில் இக் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இரண்டு நாட்களாக நடைபெற்றன.

இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் அன்ரனி பெனடிக் ஜோசப், சிரேஷ்ட சட்டத்தரணி பேரின்பம் பிரேம்நாத், பழைய மாணவர் சங்க உப தலைவர் அருட்தந்தை றொசான் அடிகளார், அருட்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளார் உற்பட பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை(24) நடைபெற்றது. இதில் விமானப்படை அணியும் புனித மைக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் அணியும் மோதின.

இறுதியில் புனித மைக்கேல் கல்லூரி அணி நான்கு புள்ளிகளால் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைத் தமதாக்கியது.

இப்போட்டியின் சிறந்த வீரருக்கான விருதை புனித மைக்கேல் கல்லூரி அணியின் வீரர் விதுசன் பெற்றுக் கொண்டார். சுற்றுப்போட்டியின் 3 ஆம் இடத்தை கண்டி மாவட்ட அணி பெற்றுக் கொண்டது.




# மாகாண மட்டத்தில் ஜொலித்த அல் பஹ்ரியா

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் கல்முனை அல் பஹ்ரியா பாடசாலை வீரர்கள் இரண்டு தங்கங்கள் ஒரு வெண்கலம் உட்பட சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்ற வீரர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

கந்தளாய் லீலாரத்தின மைதானத்தில் நடைபெற்று முடிந்த மாகாண மட்ட பாடசாலை மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலய மாணவன் எம். எம். எம். நிஹான் மற்றும் 16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் என். எப்.சஜா ஆகியோர் முதலாம் இடங்களைப் பெற்று தங்கப் பதக்கங்களை வென்றனர்.

இதேவேளை 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 4ஒ100 அஞ்சல் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும், இருபது வயதுக்குட்பட்ட 200 மீற்றர், 400 மீற்றர் போட்டிகளில் ஏ. ஆர் எம். அப்ஹம் நான்காவது இடத்தையும் பெற்றார்.

அனைத்துப் போட்டிகளிலிருந்தும் எட்டு மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் .

# இன்றைய ராசி பலன்கள் - 28.09.2023




இன்றைய பலன்கள் திருப்தி அளிக்காது. இன்று ஆன்மீக காரியங்களில் ஈடுபடுங்கள். பக்திப் பாடல்கள் மற்றும் சொற்பொழிவுகள் கேட்பதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும். இதனால் அமைதி கிடைக்கும்.

இன்று பணியிடச் சூழல் சுமூகமாக காணப்படாது. உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் பிரச்சினை காணப்படும். இது இருவருக்கும் இடையேயான உறவை பாதிக்கும் என்பதால் இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். அதை உங்களால் நிர்வகிக்க இயலாது.

பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சியும் சந்தோஷமும் கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். அதிர்ஷ்டம் மூலம் முன்னேற்றம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வீட்டில் நடைபெறவிருக்கும் ஒரு விழா பற்றி உங்கள் துணையுடன் திட்டமிட்டு ஆலோசிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பங்கு வர்த்தகங்களில் பங்கு பெறுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணலாம்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியமான மனநிலை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக யாருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று உங்களிடம் அதிர்ஷ்டம் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை உங்களை நன்றாக புரிந்து கொள்வார்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியம் காணப்படும்.




இன்று நீங்கள் நம்பிக்கை இழக்கும் சூழல் உருவாகும். தடைகளை சமாளித்து நன்மை காண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்வீர்கள். அமைதியைப் பராமரிக்க இத்தகைய நடவடிக்கையை தவிர்க்க வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஒவ்வாமை காரணமாக இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வெறுமை உணர்வு காணப்படும். வேதனை தரும் சூழ்நிலை காணப்படும். நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு சமநிலை இழப்பீர்கள். திரைப்படம் பார்த்தல் அல்லது இசை கேட்டல் போன்ற நிகழ்சிகளின் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான நிலை காணப்படாது. அதிக வேலைகள் உங்களுக்கு வருத்தம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது நல்ல புரிந்துணர்விற்கு தடையாக இருக்கும். உங்கள் துணையுடன் நல்லிணக்கம் பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இருக்கும் பணத்தை விவேகமான முறையில் செலவழிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று உங்களுக்கு செழிப்பான நாள். நீங்கள் கடினமான பணிகளைக் கூட எளிதாக மேற்கொள்வீர்கள். அனுசரனையான அணுகுமுறை மூலம் நன்மை பெறலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் செயல்திறனில் உங்கள் படைப்பாற்றல் வெளிப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை அதிர்ஷ்டகரமாக இருக்கும். பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் நீங்கள் லாபம் காணலாம்.

இன்று ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் உங்கள் இலக்குகளை அடைய நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு ஊக்கத் தொகை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்த அன்பான உணர்வின் மூலமாக இருவரிடையே உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்களுக்கு கணிசமான தொகை கிடைக்கும். அதனை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்து வீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை. திறம்பட திட்டமிட வேண்டும். இறைவழிபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணிகள் கடினமாக காணப்படும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் பாராட்டும் பெற நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உறவை பாதிக்கும் என்பதால் உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இன்று நீங்கள் கூடுதல் செலவுகள் செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

தோல் ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

# இன்றைய ராசி பலன்கள் -28.09.2023




இன்று உங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகளை சமாளிக்க நேரலாம். நீங்கள் இந்தச் சவால்களை உறுதியுடனும் திடமான மனநிலையுடனும் சமாளிக்க வேண்டும். அறிவார்ந்த முறையில் சிந்தித்து செயல்பட வேண்டும்.

பணியின் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அதிக பணிகள் காரணமாக தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியை கடைபிடிக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வலுவான பிணைப்பை உருவாக்க அனுசரித்தும் உறவிற்கான மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் கூடுதல் செலவுகள் செய்ய நேரும். வீட்டுப் புனரமைப்பு மற்றும் நிர்மாணம் குறித்த அதிகரிக்கும் பொறுபுகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகள் காணப்படும். என்றாலும் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பான அணுகுமுறை மூலம் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்படும் என்பதால் பயணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும்.

அமைதியாகவும் சுமூகமாகவும் இருப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும். உங்கள் மன நிலையில் மாற்றம் வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நீங்கள் உங்கள் சம்பாத்தியத்தை அனுபவிக்கும் நிலையில் இருக்க மாட்டீர்கள்.

உங்கள் கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் முயற்சியில் எளிதாக வெற்றி காணும் நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் சிறப்பான வாய்ப்புகள் காணப்படுகின்றன. மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்கள் திறமை மிகவும் பாராட்டப்படும். உங்கள் செயல்திறனில் உங்கள் தனித்தன்மை வெளிப்படும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் சேமிப்பும் கணிசமாக உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று திருட்டு ஏற்பட வாய்ப்புள்ளதால் கடினமான சூழ்நிலை காணப்படும். இழப்பு ஏற்படாமல் இருக்க உங்கள மதிப்பு மிக்க பொருட்களை பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் பணிகளை கவனமுடன் ஆற்ற வேண்டும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

கோவிலுக்கு செல்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்குவீர்கள். இதனால் கடவுளின் அருளும் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பும் ஏற்படும்.

பண வரவு மகிழ்சிகரமாக இருக்காது. நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். நிதி விஷயத்தில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.











# ஆஸி. இருமுனைத் தாக்குதல் கடைசி ஆட்டத்தில் சம்பவம்

## முதலிரு வெற்றிகளை வைத்து தொடரைக் கைப்பற்றிச் சென்றது இந்தியா

இந்தியா – அவுஸ்திரேலியா மோதிய ஒருநாள் தொடரின் கடைசி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா துடுப்பாட்டம் – பந்து வீச்சு என இருமுனைத் தாக்குதலைத் தொடுத்து இந்திய அணியை வீழ்த்தியது.

எனினும், ஏற்கனவே நடைபெற்ற இரு போட்டிகளிலும் வெற்றிபெற்ற இந்தியா, இத்தொடரை 2-1 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்தியா – அவுஸ்திரேலியா மோதிய மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் (50 ஓவர்கள்) தொடர் இந்தியாவில் நடந்து வந்தது.

இதில், ஏற்கனவே நடந்து முடிந்த இரு போட்டிகளிலும் இந்திய அணி அபார வெற்றிகளைப் பெற்றது.

இந்நிலையில், மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் ஆட்டம் நேற்று (27) பகல் – இரவு ஆட்டமாக ராஜ்கோட் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுதாடிய அவுஸ்திரேலிய அணி, ஏற்கனவே தாம் இந்தியாவிடம் வாங்கிய சாத்தல்களுக் குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஒரு சாத்து சாத்தவேண்டும் என்ற எண்ணத் தில் ஆடியோதோ என்னவோ தெரிய வில்லை. அந்தளவுக்கு அபாரமாக பந்துகளை அடித்து நொருக்கியது.

அதன்படி முதல் விக்கெட்டுக்காக வெறும் 8.1 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 78 ஓட்டங்களைக் குவித்த நிலை யில், டேவிட் வோர்னர் அரைச்சதம் (56) அடித்த கையோடு சிறிதுநேரத்தில் ஆட்டமிழந்தார். எனினும், அவருக்கு அடுத்து வந்த வீரர்களும் ஒரு கை பார்த்தனர்.

அவுஸ்திரேலிய அணி, 27.6 ஓவர்களில் 215 ஓட்டங்களைச் சேர்த்த நிலையிலேயே மிச்செல் மார்ஷை (96) இழந்தது. அவர் இன்னும் 4 ஓட்டங் களைச் சேர்த்திருந்தால் சதமடித்திருப் பார். ஆனால் அதைத் தவறவிட்டு விட்டார். அவருக்குப் பின்னர் ஸ்ரீபன் ஸ்மித் (74), மார்னஸ் (72) ஆகியோ ரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றனர்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி, 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 352 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்தியா சார்பாக பந்துவீச்சில், பும்ரா 3 விக்கெட்டுகளையும் குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளையும் சாய்க்க, எஞ்சிய விக்கெட்டுகளை சிராஜ், கிரிஷ்னா ஆகியோர் தலா ஒன்று வீதம் பங்கிட் டுச் சாய்த்தனர்.

பின்னர் 353 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இந்திய அணி, அணித்தலைவர் ரோஹித்சர்மாவின் ஆட்டம் கைகொடுக்க ஆரம்பத்தை அட்டகாசமாகத் தொடங்கி யது. எனினும், மறுமுனையில் நின்ற வாஷிங்டன் சுந்தர் மெதுமான ஆட் டத்தை வெளிப்படுத்தினார். அவர் தனது பங்குக்கு 18 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். எனினும், ரோஹித்தின் அதிரடி கைகொடுத்தமையால் அப்போது இந் தியா 10.5 ஓவர்களில் 74 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பின்னர் இரண்டாவது விக்கெட்டாக ரோஹித் (81) ஆட்டமிழந்து சென்றார். அப்போது அணி 144 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அவருக்குப் பின்னர் கோஹ்லி (56) அரைச்சதத்துடனும் ஷ்ரேயஸ் ஐயர் (48) அரைச்சதத்தைத் தவறவிட்டும் ஆட்டமிழந்தனர். பின் னர் வந்த வீரர்களுள் ராகுல் (26), ஜடேயா (35) ஆகியோர் தவிர ஏனைய வீரர்கள் சோடை போனதால், இந்திய அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டு களையும் இழந்த நிலையில் 286 ஓட்டங்களையே சேர்த்திருந்தது.

இதனால், அவுஸ்திரேலிய அணி 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா சார்பாக பந்துவீச் சில், மக்ஷ்வேல் 4 விக்கெட்டுகளைச் சாய்க்க, ஜோஸ் 2 விக்கெட்டுகளை தன் பங்குக்கு வீழ்த்தினார். எஞ்சிய விக்கெட்டுகளை மிச்செல் ஸ்ராக், பட் கம்மின்ஸ், கமேரன் கிறீன், தன்வீர் சங்கா ஆகியோர் தலா ஒன்று வீதம் பங்கிட்டுக்கொண்டனர்.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றபோதும், 3 போட்களைக் கொண்ட இத்தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியா தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக மக்ஷ்வேல் அசத்த, தொடரின் நாயகனாக இந்தியாவின் ஷுப்மன் ஹில் தெரிவா னார்.

# உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

## மனவளக்கலை

# sky Yoga


## நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

**செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00**

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்

**sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள்**

**(Sky Yoga Foundation Course )**



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்

**sky Yoga Center**

53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607